## சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் - 2016

---

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று. காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 19 ஆம் இலக்க சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்ற சட்டத்தின் 11(2) பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் 2016 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியமத்தின் 47 ஆம் பநதியின் பிரகாரம் சொத்தொன்றின் நியாயமான பெறுமதி அதன் தேறிய பெறுமதியில் குறிப்பிடத்தக்க வேறுபாடொன்று ஏற்படுமிடத்து வருடாந்தம் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் நியாயமான பெறுமதியில் கவனத்தில் கொள்ள முடியாத அளவு வேறுபாடொன்று மாத்திரம் காணப்படுமாயின் சொத்துக்கள் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான சொத்துக் கணக்கில் காணப்படுகின்ற கிரயம் ரூபா 625,643,071 தொகையான சொத்துக்கள் தொடர்பாக அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியமத்தின் 72 ஆம் பந்தியின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படாமல் மன்றம் ஆரம்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டின் போது மன்றத்திற்கு கையளிக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியான ரூபா 272,000,000 இல் 50 சதவீதம் கட்டிடங்களின் பெறுமதியைக் கருதி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கை

நிதிநிலைமைக் கூற்றில் காணப்படுகின்ற ரூபா 360,962,563 தொகையான அரசாங்கத்தின் மானியத்தைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் வருடாந்தம் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட போதும், அந்த மூலதன மானியத்தை காலக்கழிவு செய்யும் கொள்கையொன்று மன்றத்தால் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

இணையதள சேவைக் கம்பனியால் பிரஜாசக்தி நிலையங்களில் 2009 திசெம்பர் 16 ஆந் திகதி முதல் 2013 நவம்பர் 01 ஆந் திகதி வரையான காலத்தில் செலவிடப்பட்ட V-SAT அன்டென்னா பராமரிப்பு சேவையின் 120 சந்தர்ப்பங்களில் 96 சந்தர்ப்பங்களுக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 5,415,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரியதாக முன்னாள் வரிசை அமைச்சிலிருந்து ரூபா 4,356,341 தொகையொன்று மன்றத்திற்கு மீளளிப்புச் செய்யப்படவேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய வரிசை அமைச்சின் அறிக்கையின் பிரகாரம் அத்தொகை செலுத்த வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற பெற வேண்டிய மீதி ரூபா 9,568,353 தொகை, தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 17,181,605 தொகை மற்றும் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 88,184,387 தொகை தொடர்பான மீதி உறுதிப்படுத்தல் மற்றும் காலப்பகுப்பாய்வு என்பன சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீண்ட காலமாக கணக்குகளில் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 13,607,208 தொகையான முற்பணம் மற்றும் கடன்பட்டோர் மீதி மற்றும் ரூபா 10,165,586 தொகையான கடன்கொடுத்தோர் மீதி என்பவற்றை செலுத்துவதற்கு / தீர்த்து வைப்பதற்கு மன்றத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 நவம்பர் 07 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான செயற்குழுக் கூட்டத்தின் போது மீண்டும் அறவிடுவதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்த போதும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் கட்டிடமொன்றில் மன்றத்தால் மேற்கொள்ளப்பட்ட மீளமைப்பு நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்ட தொகையில் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டியிருந்த ரூபா 1,890,246 தொகை 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரஜாசக்தி அபிவிருத்தி செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக கணனி தரவு முறைமையொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்காக தனியார் கம்பனியொன்றிற்கு 2014 ஏப்ரல் 23 ஆந் திகதி ரூபா 541,840 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படாதிருந்தமையால் வழங்கப்பட்ட அந்த முற்பணத் தொகையை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உரிய வரிசை அமைச்சிலிருந்து மீளளிப்புச் செய்யும் அப்படையில் கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டிற்கும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கும் உரிய ரூபா 6,813,624 தொகை, 2014 ஆம் ஆண்டுக்குரிய ரூபா 47,370,427 தொகை மற்றும் 2015 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 3,716,500 தொகை என்பன 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றம் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2005 இன் 19 ஆம் இலக்க சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்ற அதிகாரச்சட்டம் | |
| (i) 3(1) ஆம் பிரிவு | 2014 ஆம் ஆண்டின் பின்னர் மன்றத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக முகாமைத்துவ சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>2015 செப்தெம்பர் 21 ஆந் திகதிய 1933/13 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் நடவடிக்கைகள் மலைநாட்டு புதிய கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் தொண்டமான் மன்றமாக நடவடிக்கை எடுக்காதிருந்தமையும் அதனால் அதற்காக பணிப்பாளர் சபையொன்று நியமித்தல் அமைச்சின் மூலம் அல்லது வேறு ஏதேவொரு முறையிலோ இடம்பெறாதிருந்தமையும் இது தொடர்பாக பணிப்பாளரால் (நிதி) குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ii) 10 ஆம் பிரிவின் 2, 3 மற்றும் 4 ஆம் பந்திகள் | சுயமாக அதிகாரம் மற்றும் இலக்குகளை அமுல்படுத்தும் போதும் நிறைவேற்றும் போதும் சகல செலவினங்களும் மன்றத்தால் கட்டியெழுப்பப்பட்ட நிதியத்திலிருந்து செலவிட வேண்டியிருந்தமையும், மன்றத்தின் மொத்தச் செலவினமான ரூபா 102,827,804 தொகை மீளாய்வாண்டில் வரிசை அமைச்சிலிருந்து பெற்று மன்றத்தின் பணிகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டில் மன்றத்தால் ரூபா 3.35 மில்லியன் வருமானம் மாத்திரமே உழைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 1981 இன் 26 ஆம் இலக்க ஊழியர் சேமலாப திருத்தச் சட்டத்தின் II ஆம் பகுதியின் 10(1) மற்றும் (2) ஆம் பந்தி | 2012 செப்தெம்பர் மாதம் முதல் 2013 மார்ச் வரையிலான காலத்திற்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 4,205,282 தொகையான ஊழியர் சேமலாப பெறுநர் பங்களிப்பு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| நிதிப்பிரமாணம் 757 | மன்றத்தின் சகல பிரிவுகளையும் மேவுகை செய்யும் வகையில் மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் மன்றத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 32,380,913 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 45,027,660 ஆகும். அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 12,646,747 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் சம்பளம் மற்றும் வேதனங்கள் வழங்கல் மற்றம் ஏனைய நுகர்வுச் செலவினங்கள் மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 7,248,230 தொகையினால் அதிகரித்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு ரூபா 5,687,651 இனாலும், பிரஜா சக்தி செயற்திட்டத்தின் கணனி மென்பொருள் அபிவிருத்திக்கான காலக்கழிவு ரூபா 13,471,171 இனால் குறைவடைந்தமையும் இந்த அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஐந்து ஆண்டுகளினது நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது 2012 ஆம் ஆண்டில் ரூபா 54,307,157 தொகையான பற்றாக்குறை 2016 ஆம் ஆண்டளவில் ரூபா 32,431,913 வரை குறைவடைந்திருந்தது. எனினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைச் சீராக்கியதன் பின்னர் 2012 ஆம் அண்டில் ரூபா 37,825,404 தொகையான பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 81,671,104 ஆகக் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட மூலதன செலவினம் ரூபா 54.6 மில்லியனாக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் எந்தவொரு மூலதனச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக மன்றத்தின் பணிகளுக்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் பிரஜா சக்தி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பரவும் நோய்கள் மற்றும் போசனை தொடர்பாக தெளிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம், சுயதொழில் செயலமர்வுகள் கணனி தொடர்பான மாணவர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் போன்ற சமூக பங்குபற்றலுடனான நிகழ்ச்சித்திட்டங்களும் தொண்டமான் தொழில்பயிற்சி நிலையத்தின் தகவல் தொலைத்தொடர்பு தொழில்நட்ப பயிற்சி (ICIT), அனுமினியம், உருக்கு வேலை (வேல்டின்), மோட்டார் சைக்கிள், மின்தொழில்நுட்பவியலாளர், ஆடை தயாரிப்பாளர், தச்சு வேலை பயிலுனர் மற்றும் ஆங்கிலம் போன்ற 06 மாத மற்றும் 12 மாத தொழில்பயிற்சி பாடநெறிகளை நடாத்துவதற்கும் ஏனைய தெளிவுபடுத்தும் செயலமர்வுகளுக்காகவும் 07 முகாம்கள் நடாத்தப்பட்டிருந்தன.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றத்தால் தோட்ட சமூகத்திற்கு சேவையினை வழங்கும் வகையில் நடாத்திச் செல்லப்படுகின்ற 44 பிரஜா சக்தி நிலையங்களின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் மேலும் 35 பிரஜா சக்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்கு 2012 ஆம் ஆண்டின் போது காணி அளவை நடவடிக்கைகளுக்காக ரூபா 2,359,298 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் அந்தக் காணிகள் மன்றத்திற்குச் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 இன் 19 ஆம் இலக்க சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்ற அதிகாரச்சட்டத்தின் 10(2) ஆம் பிரிவின் கீழ் மன்றத்திற்கு கையளிக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களுக்கக உரித்துறுதி தயாரித்தல் 2016 திசெம்பர் வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரஜா சக்தி செயற்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட சில பிரதேசங்களின் இணைப்பு நடவடிக்கைகளுக்காக அமைச்சினால் ரூபா 20,484,000 தொகை மன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், மன்றத்தால் அதற்காக 90 வெளிக்கள உத்தியோகத்தர்கள சேர்க்கப்பட்டிருந்தனர். அந்த உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்படுகின்ற படிகள் பிரஜா சக்தி செயற்திட்டத்தின் முகாமையாளர் மற்றும் செயற்திட்ட இணைப்பாளரின் தனிப்பட்ட கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அந்த வெளிக்கள இணைப்பு முகாமையாளர் மற்றும் செயற்திட்ட இணைப்பாளர் என்போரினால் போலியாக பெயர் சமர்ப்பித்து அந்தப் பணத்தில் ரூபா 4,252,500 தொகை மோசடியாக பெறப்பட்டிருந்தமை 2011 ஏப்ரல் முதல் 2013 ஏப்ரல் வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த உத்தியோகத்தரால் அந்தப் பணத்தை மீளச் செலுத்துவதற்கு இணங்கி 2014 மே 25 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 1,050,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், எஞ்சிய ரூபா 3,202,500 தொகை 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2010 ஆம் ஆண்டு முதல் 2011 மார்ச் வரையான காலப்பகுதியில் அமைச்சினால் மன்றத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 5,265,000 தொகையான வெளிக்கள இணைப்பாளர் படி மேற்கூறப்பட்ட தனியார் வங்கிக் கணக்கிற்கு செலவு வைத்தமை தொடர்பாக மன்றத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொண்டமான் கலாசார நிலையத்தின் பெறுமதி ரூபா 72,818,294 தொகையான 09 நிர்மாண ஒப்பந்தங்கள் 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இடைநடுவில் இடைநிறுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் ஏனைய நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 25,675,995 தொகையான இந்த பூர்த்தியடையாத வேலைகள் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்வதற்கு மன்றம் தவறியிருந்தது. உரிய நிர்மாணத்திற்கான வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ஒப்பந்தகாரருக்கு ரூபா 7,544,265 தொகை 2012 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவரினால் பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாண நடவடிக்கைகளுக்காக அவருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,985,942 தொகை 2012 ஆம் ஆண்டு முதல் கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் கணனி கொள்வனவு செய்தல் மற்றும் V-SAT என்டனா பராமரிப்பு சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக 2009 செப்தெம்பர் முதல் 2014 மார்ச் வரையான காலத்தில் ரூபா 51,099,464 தொகை தனியார் சேவை நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**4.4 விளைவற்ற சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட ரூபா 5,396,901 கிரயமான 57 மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்வதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமல் கணக்காய்வுத் திகதியான 2017 நவம்பர் 30 ஆந் திகதி வரை விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) சுயதொழில் கடன் செயற்திட்டத்தின் கீழ் (Self Employment Loan Project) பிரஜா சக்தி நிலையங்களுக்கு வழங்குவதற்காக 2014 திசெம்பர் 01 ஆந் திகதி ரூபா 4,048,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட 44 சீமெந்து கலவைக்கல் இயந்திரங்கள் 2015 பெப்ரவரி 24 ஆந் திகதி வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவின் காரணமாக உரிய பிரஜா சக்தி நிலையங்களுக்கு வழங்குவதற்கு முடியாதிருந்ததுடன் 2017 திசெம்பர் வரையிலும் நோர்வூட் தொண்டமான் விளையாட்டுக் கட்டிடத் தொகுதியில் விளைவற்று களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) நன்கொடையாகப் பகிர்ந்தளிப்பதற்காக 2014 ஆம் ஆண்டின் போது கடன் அடிப்படையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,070,848 பெறுமதியான 15 கோயில் மணிகள் மற்றும் 377 செம்பு கிரியை விளக்குத் தொகுதிகளும், ரூபா 350,000 பெறுமதியான 07 உடற்பயிற்சி உபகரணத் தொகுதிகளும், ரூபா 1,373,520 பெறுமதியான 194 விளையாட்டுத் உபகரணத் தொகுதிகளும் அந்த விளையாட்டுத் தொகுதிகள் யாவும் விளைவற்றுக் காணப்படுவதாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

2014 ஆம் ஆண்டின் இறுதியின் போது கொள்வனவு செய்யப்பட்ட இந்த உபகரணங்கள் 2015 சனவரி மாத சனாதிபதி தேர்தலின் பின்னர் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் பகிர்ந்தளித்தல் நிறுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 யூலை 12 ஆந் திகதி வரையிலும் 07 கோயில் மணிகள் மற்றும் 68 செம்பு கிரியை உபகரணங்கள் கோயில்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் 07 உடற்பயிற்சி உபகரணங்கள் அந்த விளையாட்டரங்கில் காணப்படுகின்ற உடற்பயிற்சி நிலையத்தின் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தது. விளையாட்டு உபகரணத் தொகுதிகளிலிருந்து பகிர்ந்தளிக்கக்கூடிய சகலதும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் சில விளையாட்டு பொருட்கள் துருப்பிடித்திருந்தமையால் பாவனைக்கு தகுதியற்ற நிலையில் காணப்படுவதாக இதற்குப் பதிலாக மன்றத்தின் பணிப்பாளரால் (நிதி) குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் பிரஜா சக்தி செயற்திட்டத்தின் கீழ் 42 பிரஜா சக்தி நிலையங்களுக்கு இணையதள வசதிகளை வழங்குதல், அதற்கான ஆலோசனைக் கட்டணங்களைச் செலுத்துதல், 42 V-SAT அன்டென்னா உபகரணத் தொகுதிகளைக் கொள்வனவு செய்தல், உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தலுக்காக ரூபா 131,404,288 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2014 மார்ச் 01 ஆந் திகதி முதல் அந்த இணையதள சேவைகளைப் பெறுதல் நிறுத்தப்பட்டமையின் காரணமாக அந்த 42 அன்டென்னா உபகரணத் தொகுதிகளும் கணக்காய்வுத் திகதியான 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையும்

விளைவற்றுக் காணப்பட்டது. மேலும், அந்த சேவைகள் நிறுத்தி வைக்கப்பட்டமைக்கான பணிப்பாளர் சபையின் தீர்மானம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(உ) நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 398,999 கிரயமான வெற்றிக் கேடயங்களின் இருப்பொன்று நீண்ட காலமாக உரிய தரப்பினருக்கு விநியோகிக்காமல் விளைவற்றுக் காணப்பட்டது.

**4.5 இனங்காணப்பட்ட நட்டம்**

2010 திசெம்பர் 07 ஆந் திகதிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் இலக்கம் 150 இற்கு முரணாகவும், உரிய வரிசை அமைச்சினதும் நிதி அமைச்சினது அங்கீகாரமின்றி றம்பொட கலாசார நிலையத்தின் பயன்பாட்டிற்காக WPPF 7268 என்ற மிட்சுபிசி டபள்கப் வண்டி ரூபா 1,000,000 தொகையான ஆரம்பக் கொடுப்பனவும் மற்றும் 60 மாதாந்த தவணைப் பணமாகச் செலுத்தும் அடிப்படையில் ரூபா 5,840,000 தொகைக்கு 2014 நவம்பர் 26 ஆந் திகதி குத்தகை முறைமையின் கீழ் தனியார் கம்பனியொன்றிலிருந்து கொள்வளவு செய்யப்பட்டிருந்தது. நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் குத்தகைத் தவணைப்பணம் செலுத்தாமையின் காரணமாக உரிய கெப் வண்டி குத்தகையாளரினால் மீண்டும் கைப்பற்றப்பட்டிருந்ததுடன் 2015 நவம்பர் 30 ஆந் திகதியளவில் வாகனத்தின் உரித்தும் குத்தகையாளரினால் கையேற்கப்பட்டிருந்தது. எனினும், இந்த வாகனத்திற்காக செலவிடப்பட்ட ஆரம்பக் கொடுப்பனவு ரூபா 1,070,290 தொகை மற்றும் குத்தகைத் தவணைப் பணமான ரூபா 495,214 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 1,565,504 மீளாய்வாண்டின் இறுதியில் முற்பணமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பணத்தை அறவிடும் இயலுமை தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் பிரதான அலுவலகம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட 03 செயற்திட்டங்களில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 218 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 130 ஆனமையால் வெற்றிடங்கள் 88 ஆக இருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்திற்கான பதவியணியினர் மற்றும் சம்பள அளவுகள் அங்கீகரித்துக் கொள்ளப்படாதிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அந்த செயற்திட்டத்தின் உள்ளபடியான பதவியணியினர் 33 ஆகும்.

(ஆ) பிரதான அலுவலகத்தின் கணக்காளர் பதவி உள்ளடங்கலாக 06 பதவிகள் நீண்டகாலமாக வெற்றிடமாகக் காணப்பட்டது. 2005 ஆம் ஆண்டு முதல் பிரதி பணிப்பாளர் நாயகம் (நிதி) பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் நியமிக்கப்படாமல் 60 வயதை விஞ்சிய ஒரு உத்தியோகத்தர் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

(இ) நோர்வூட் விளையாட்டுத் தொகுதி செயற்திட்டத்திற்காக 2003 ஆம் ஆண்டின் போது 21 பதவிகளின் பதவியணியினர் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதில் விளையாட்டு பயிற்சியளித்தல் செயற்பாடுகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் அமுல்படுத்தப்படாமையினால் இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஈ) 2013 ஆம் ஆண்டின் போது மன்றத்தால் ரூபா 150,000 செலவில் வெளிவாரி ஆலோசனையாளர்களிடமிருந்து தயாரித்து பெறப்பட்ட பதவியணியினர் ஆட்சேர்ப்பு நடைமுறை 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அங்கீகரித்துக் கொள்ளப்படவில்லை. தற்போது வரையிலும் மன்றத்தின் செயற்திட்டத்திற்குரிய வரிசை அமைச்சினால் கையேற்று அமுல்படுத்தப்பட்டமையால் செலவினங்கள் பயனற்ற செலவினமாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) தொண்டமான் கலாசார நிலையத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட கலாசார உத்தியோகத்தர் பதவிக்காக 2005 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையும் உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்படாதிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் இல்லாத இணைப்பாளர் மற்றும் காவலர் (Warden) என்ற 02 பதவிக்கு இரண்டு உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு மீளாய்வாண்டில் ரூபா 832,180 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மன்றத்தால் 2016 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 15 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2007 ஒக்தோபர் 02 ஆந் திகதிய பீஈடீ/45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள் தொடர்பான சான்றிதழ் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2014 ஆம் ஆண்டு முதல் மன்றத்திற்காக பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்படாதிருந்ததுடன் மன்றத்தால் பேணிச் செல்லப்படுகின்ற 04 செயற்திட்டங்களின் சகல பணிகளும் 2016 யூலை 20 ஆந் திகதிய சனாதிபதி செயலகத்தின் CSA/1/31 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சினால் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த அமைச்சின் செயலாளரால் கணக்காய்விற்காக கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 மற்றும் 2011 திசெம்பர் 23 ஆந் திகதிய முறையே DMA/2009(1) ஆம் இலக்க மற்றும் DMA/ADM/2011/1/26 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை தொடர்பில் கவனம் செலுத்தி செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வு பதவியணியினரை பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும், உள்ளகக் கணக்காய்வாளரால் வெற்றிடமாகக் காணப்பட்ட கணக்காளர் பதவியின் பணிகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மன்றத்திற்காக மீளாய்வாண்டில் பணிப்பாளர் சபையொன்று காணப்படாமையின் காரணமாக அங்கீகாரம் பெற்ற பாதீடொன்று காணப்படாதிருந்ததுடன் வரைவு பாதீடொன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 5.4 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக மன்றத்தால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மன்றம் ஆரம்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆண்டறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் மீது விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| (அ) | ஒப்பந்த நிர்வாகம் | உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படாமை. |
| (ஆ) | நிதிக் கட்டுப்பாடு | பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்காமை. |
| (இ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டமை |
| (ஈ) | உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாமை |